**வில்கமுவ பிரதேச சபை - 2022**

-------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வில்கமுவ பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வில்கமுவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்பு

இந்நிதிக் கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் உரிய எழுத்து மூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்,

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியின் 1.6.1 இன் (அ), (ஆ), (இ) அவதானிப்புக்கள் தவிர முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) முன்னைய ஆண்டின் நிர்மாணக் கடன்பட்டோரிடம் இருந்து பெறவேண்டிய ரூபா 3,899,991 ஆன கடன்பட்டோர் கணக்கில் ரூபா 3,799,991 எனக் கணக்கீடு செய்யப்பட்டதால் பதிவு செய்யப்பட்ட தவறை மீளாய்வாண்டிலும் சீராக்கம் செய்திருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் கணக்குகளை தயாரிக்கும் போது சீராக்குவதாக | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ஆ) முன்னைய ஆண்டில் நிர்மாண கடன்கொடுத்தோருக்கு செலுத்திய ரூபா 4,734,538 ஆன பணம் நிர்மாண கடன் கொடுத்தோர் கணக்கில் ரூபா 3,500,338 என பதிவு செய்யப்பட்ட தவறை மீளாய்வாண்டிலும் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) முன்னைய ஆண்டில் ரூபா 1,059,200 ஆன நிர்மாண கடன் கொடுத்தோர் கொடுப்பனவொன்றை மூலதன கொடுப்பனவாக பதிவு செய்யப்பட்ட தவறை மீளாய்வாண்ன் போது சீராக்கும் போது நிர்மாண கடன் கொடுத்தோர் கணக்கு வரவு வைக்கப்பட வேண்டிய போதிலும் அக்கணக்கில் செலவு வைக்கப்பட்டமை மற்றும் திரண்ட நிதியத்திற்கு | - மேற்படி - | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| வரவு வைத்த காரணத்தினால் கடன் கொடுத்தோர் கணக்கு ரூபா 2,118,400 கூடுதலாகவும் திரண்ட நிதியம் அப் பெறுமானத்தால் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஈ) மீளாய்வாண்டின் போது ரூபா 2,480,000 கூட்டுத்தொகையான 04 வாகனங்கள் ஏல விற்பனை செய்யப்பட்டிருந்த போதும் மோட்டார் வண்டிகள் மற்றும் வாகன விற்பனை கணக்கிலிருந்தும் மூலதன ஈடுபாட்டிற்கு வருமானத்தில் பங்களிப்புக் கணக்கிலிருந்தும் ரூபா 1,000,000 அகற்றப்பட்டவை காரணமாக அக்கணக்கு ரூபா 1,480,000 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) மீளாய்வாண்டின் போது காணி மற்றும் கட்டிடங்கள் அலகுகள் 16 ரூபா 62,035,500 இற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் அம்மதிப்பீட்டுப் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 இறுதி கணக்கினைத் தயாரிக்கும் போது சீராக்குவதாக. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ஊ) மீளாய்வாண்டின் போது நூலகக் கட்டிடத்தின் வாடகை வருமானம் மற்றும் வாரச்சந்தை பொது மலசலகூடத்தை குத்தகைக்கு வழங்கியதன் அடிப்படையில் பெற வேண்டிய வருமானம் முறையே ரூபா 150,000 மற்றும் ரூபா 250,000 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் அறிக்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்து கணக்கு மூலதன இடுப்பாட்டிற்கு வருமானத்தில் பங்களிப்பு கணக்குகளை ரூபா 468,494 ஆன இணக்கமின்மை காணப்பட்டது | 2023 இறுதி கணக்கினைத் தயாரிக்கும் போது சீராக்குவதாக | கணக்கு மீதிகள் சீராக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 11 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக் கூற்றுகளின் பிரகாரம் மீதிகள் அண்மித்த அறிக்கையின் பிரகாரம் மீதிகளுக்கு இடையே ரூபா 11,711,557 ஆன இணக்கமின்மை ஒன்று அவதானிக்கப்பட்டது. | ஆவணங்களை பரீட்சித்து பார்த்து சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கணக்கு மீதிகள் சீராக்கப்பட வேண்டும். |

### 1.6.3 தொங்கல் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நீண்டகாலமாக இருந்து வரும் ரூபா 1,501,545 ஆன தொங்கல் கணக்கின் மீதியை சீராக்குவதற்கு | சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | தொங்கல் கணக்கின் மீதியை இனங் கண்டு தீர்வு |

| | |
|---|---|
| நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செய்யப்பட வேண்டும் |

### 1.6.4 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்தம் ரூபா 160,401,921 ஆன 10 கணக்கு விடயங்களுக்குரிய உறுதிகள், அட்டவணைகள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல்கள், சமர்ப்பிக்கப் படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியாது இருந்தது. | சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | அட்டவணைகள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல் சமர்ப்பிக்கப்பட வேண்டும் |

### 1.7 இணக்கமின்மைகள்
**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | | | |
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 ஆம் பிரிவு | சபைக்குரிய வீதிகள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருக்க வில்லை. | பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் வீதிகள் அளவிடப்பட்டு வீதி பொருட் பதிவேடு தயாரித்து நாளது வரையாக்கப்பட்டுள்ளதாக | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| **(ஆ) விதிகள் மற்றம் நியதிச் சட்ட ஏற்பாடுகள்** | | | |
| 1988 இன் பிரதேச சபைகளின் (நிதி மற்றம் நிர்வாகம்) விதி 218 | காணி மற்றும் கட்டிடங்களுக்குரிய வருடாந்த கணிப்பீடு மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை | எதிர்காலத்தில் கணிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு உள்ளதாக | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| **(இ) உப உறுப்புரை ஏற்பாடுகள்** | | | |
| ஆகஸ்ட் 1988 ஆகஸ்ட் 23 ஆம் திகதிய 520/7 ஆம் இலக்க இலங்கை ஜனநாயக சோசலிச | ப பிரதேச சபை எல்லைக்குள் காட்சிப்படுத்தப்பட்டிருந்த விளம்பர பதாதை தொடர்பாக கணிப்பீடொன்று மேற்கொள்ளப்படவில்லை. | குறித்த கணிப்பீட்டு நடவடிக்கை தற்போது மேற்கொள்வதாக | பிறப்பிக்கப்பட்ட உப உறுப்புழைரயின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | குடியரசின் அதி விசேட வர்த்தமானியின் 1 (ஆ) பகுதியன் கட்டணங்கள் பிறப்பிக்கப்பட்ட உப உறுப்புரையின் 39 ஆவது பகுதி | | | |
| (ஈ) | இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் 104(அ) | ரூபா 162,700 கூட்டு பெறுமதியான வீதி விளக்குகள் தொகுதி களுக்குரிய மின் உபபாகங்கள் காணாமல் போனமை மற்றும் சுடலைச் சாலை வருமானம் பிரதேச சபைக்கு கையளிக்காமை தொடர்பாக குறித்த பரிசோதனையொன்று மேற்கொண்டு பொறுப்பான தரப்பினர்கள் இனங் காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | நி.பி 104(4) பரிசோதனை நடத்துவதற்காக குழுவொன்று பெயரிடப்பட்டு அங்கீகாரத்திற்காக மத்திய மாகாண பிரதான செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து இருப்பதாகவும் | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (உ) | 2009 ஏப்ரல் 16 ஆம் தேதி 09/2009 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளியேறல் பதிவு செய்ததற்காக கைவிரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | 2022.09.29 ஆம் திகதி இவ்வியந்திரம் செயலற்று இருந்ததாகவும் திருத்தங்களுக்காக அங்கீகாரம் கிடைக்கவில்லை எனவும் | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 6,924,259 ஆக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய மீண்டெழும் வருமானம் ரூபா 12,033,417 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2022 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2021 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 680,000 | 709,688 | 1,151,420 | 788,227 | 680,000 | 709,688 | 89,566 | 1,229,959 |
| (ii) | வாடகை | 96,000 | 96,000 | 64,000 | 36,500 | 96,000 | - | - | 4,500 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 800,000 | 741,845 | 1,557,760 | - | 800,000 | 815,915 | - | 815,915 |
| (iv) | நீதிமன்ற தண்ட பணம் | 5,000,000 | 2,934,814 | 3,230,228 | 10,041,398 | 5,500,000 | 2,488,988 | - | 10,336,812 |
| (v) | முத்திரைக் கட்டணங்கள் | 700,000 | 735,236 | 1,311,819 | 252,600 | 700,000 | 576,583 | - | 829,183 |
| (vi) | ஏனைய வருமானம் | 4,911,000 | 4,900,160 | 5,485,281 | 5,102,961 | 4,000,000 | 4,606,524 | (8,127) | 5,688,082 |
| | | 12,187,000 | 10,117,743 | 12,800,508 | 16,221,686 | 11,776,000 | 9,197,698 | 81,439 | 18,904,451 |

### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரி** | | |
| | சபையினால் முன்னைய ஆண்டில் வீதவரி ஆதனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கையில் 2011 ஆம் ஆண்டின் வீதவரி மதிப்பீட்டினை அடிப்படையாக கொண்டு வரி அறவிடப்பட்டிருந்தது. | மதிப்பீடு 2021 ஆம் ஆண்டில்ருந்து மேற் கொள்ளப்பட்டுள்ளதாக | புதிய மதிப்பீட்டின் படி வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ)** | **ஏனைய வருமானம்** | | |
| i. | 2022 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 03 வார சந்தைகளுக்குரிய ரூபா 1,582,657 ஆன நிலுவை வாடகை அறவிடப்பட்டு இருக்கவில்லை | இந்நிலுவைத் தொகையை பதிவழிப்பதற்கு சபையால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாக. | நிலுவை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| ii. | சபைக்கு சொந்தமான பேரகஹன்ன வாரச் சந்தையில் முன்னைய ஆண்டுகளின் நிலுவை குத்தகை தொகை ரூபா 250,000 தொகை அறவிடப்படாத இருந்ததுடன் முன்னைய ஆண்டில் அத்தியவசிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தியின் கீழ் ரூபா 1,300,000 செலவிடப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டிருந்த இவ்வாரச்சந்தை மீளாய்வாண்டிலிருந்து மூடப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டில் மீண்டும் மீண்டும் ஒரு முறை வியாபாரிகள் மக்களை அறிவூட்டி வாரச்சந்தை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக | வருமான உழைப்பு மார்க்கங்களில் இருந்து வருமானத்தைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மோட்டார் சைக்கிள் ஒன்றை கையேற்பதற்காக தாமத கட்டணமாக ரூபா 35,600 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இவ்வாறான தாமதம் ஒன்று இடம் பெறாமல் பார்த்துக் கொள்வதாக | நிதிப் பிரமாணம் 156 ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) பிரதேச சபை சட்டத்தில் பிரதேச சபைக்குரிய 40 GI குழாய்கள் பற்றாக்குறை தொடர்பாக 2021 மார்ச் 17 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட நி.பி 104(4) பரிசோதனை அறிக்கை பிரகாரம் குறித்த பற்றாக்குறை ரூபா 119,937 தொகையை அதனுடன் தொடர்பான உத்தியோகத்தர் களிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென பரிந்துரைக் கப்பட்டிருந்த போதும் குறித்த உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை | விரைவில் பணத்தை அறவவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பிரதேச சபை பயன்படுத்தும் 63 காணிகள் பொது சந்தைக் காணி மற்றும் கெப் வண்டியின் உரித்தினை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணியை கையேற்பதற்குரிய நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்வதாக. | சொத்துக்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு ரூபா 220,000 ஆன டிராக்டர் டேலர் ஒன்று ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக விளைவற்றும் குறை பயன்பாட்டுடனும் காணப்பட்டது. | உழவு இயந்திர டேலர் 2022.12.31 ஆம் திகதி பொருள் கணிப்பீட்டின் பிரகாரம் ஏல விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதாகவும் அதனைத் திருத்தம் செய்வதற்கு அதிகளவு பணம் செலவாவதால் பணம் போதிய அளவு இல்லாமையால் இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது | முறைப்படி கை தவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முன்னைய ஆண்டின் போது ரூபா 1,000,000 மதிப்பிடப்பட்ட தொகைக்கு நிர்மாணிக்கப்பட்ட கொம்பு கும்புகந்தன மாத்தகல பொதுக் கிணறுக்கு அருகில் செல்லும் கொங்கிரீட் வீதி நிர்மாணத்தின் தரப் பரிசோதனையின் பிரகாரம் பல சந்தர்ப்பங்களில் சித்தியடையாதிருந்த போதும் குறித்த செயற்பாட்டை உடன்படிக்கை பிரகாரம் நிறைவேற்றாத சங்கத்தை கறுப்பு பட்டியலில் உட்படுத்துவதற்கும் மேற்பார்வை உத்தியேகத்தர்கள் தொடர்பாக நடவடிக்கை ஒன்றை எடுக்க செயற்பட்டிருக்கவில்லை. | 2022 நவம்பர் மாதம் 08 ஆம் திகதி பெற்றுக் கொண்ட பொதுச்சபை தீர்மானத்தின் 12 ஆம் இலக்க முன்மொழிவின் பிரகாரம் இச்சங்கத்தை கறுப்பு பட்டியலில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாகாண பிரதான செயலாளர் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக தேர்வு செய்யுமாறு நிறுவனங்களுக்கு அறிவுறுத்தி உள்ளதாக எதிர்காலத்தில் சீராக ஆலோசனைகளை விட உத்தியோர்களுக்கு வழங்கி ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக | உடன்படிக்கை பிரகாரம் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படாததால் குறித்த ஒப்பந்ததாரரை கறுப்பு பட்டியலில் இடுவதற்கும் மேற்பார்வை உத்தியோகத்தர் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**3.4 மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை சபையின் 09 பதவிகளில் வெற்றிடங்கள் பற்றாக்குறை காணப்பட்டன. | உள்ளுராட்சி மன்ற ஆணையாளர் மத்திய மத்திய மாகாணத்திற்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக இது தொடர்பாக மாதாந்த உயர்மட்ட முகாமைத்துவத்திற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும் |
| (ஆ) | இடமாற்றம் பெற்று சென்றுள்ள 06 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 469,115 ஆன கடன் மீதியொன்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | தீர்வு செய்து தருமாறு குறித்த நிறுவனங்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளதக | நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வான்டில் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட 05 வருமான விடயங்கள் மற்றும் 04 செலவின விடயங்களின் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினங்களுடன் ஒப்பிடும் போது முறையே 05 சதவீதம் முதல் 49 வரையிலும் 15 முதல் 100 சதவீதம் வரையிலும் விலகல்கள் அவதானிக்கப்பட்டதர்ல பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு தேவையான ஆலோசணைகளை விடய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசணை வழங்கியுள்ளதாக | கவனமாகவும் தேவைப்பாட்டினை இனங்கண்டு பாதீடு தயாரிக்கப்பட வேண்டும். |